இந்திய உச்ச நீதிமன்றம்

2021-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 16-ஆம் நாள்

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர் இந்திரா பானர்ஜி

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் வி.ராமசுப்பிரமணியம்

சிறப்பு அனுமதி மனு (உரிமையியல்) எண் 2492/2021

கே.பி. நடராஜன் மற்றும் ஒருவர் ..... மனுதாரர்கள்

/எதிர்/

முத்தாளம்மாள் மற்றும் பலர் ..... எதிர்மனுதாரர்கள்

உரிமையியல் நடைமுறை சட்டம், 1908, கட்டளை 32 விதி 3 - மனுதாரர்கள் ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி வழக்கு தொடுத்துள்ளார்கள் - அந்த வழக்கில் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் வழக்கறிஞர் மூலம் ஆஜராகியும், பின்னர் தோன்றா தரப்பினராக இருந்துள்ளனர் - வாதுரையில் மூன்றாவது பிரதிவாதியான இளவர் தனது வழக்கு துணை நண்பரால் (இளவரின் தந்தை) பிரதிநிதித்துவம் செய்யப்படுவதாக விவரிக்கப்பட்டுள்ளது - மனுதாரர்கள் வாதுரையோடு கட்டளை 32 விதி 3-ன் கீழ்

இளவருக்கு காப்பாளராக இளவரின் தந்தையை அதாவது இரண்டாவது பிரதிவாதியை நியமிக்ககோரி ஒரு மனுவும் செய்துள்ளார் - மனுதாரர்கள் ஏற்றதை ஆற்றுக பரிகாரத்தை நீதிமன்றம் வழங்காத சூழ்நிலையில் அதற்கு மாற்று பரிகாரமாக மனுதாரர்கள் எதிர்மனுதாரர்களுக்கு கொடுத்த பணத்தை வட்டியுடன் வழங்ககோரி கேட்டுள்ளார் - ஆனால், விசாரணை நீதிமன்றம் எதிரவர் வாரா தீர்ப்பாணை வழங்கி அதில் மனுதாரர்களுக்கு ஏற்றதை ஆற்றுக பரிகாரம் வழங்கியுள்ளது - எனினும், நிறைவேற்றுகை மனு தாக்கல் செய்யப்பட்டதிலும் எதிர்மனுதாரர்கள் தோன்றாத் தரப்பினர்களாக இருந்ததால் எதிரவர் வாரா உத்தரவு பிறப்பிக்கப்பட்டு நிறைவேற்றுகை மனு அனுமதிக்கப்பட்டது - அதன் பின்னர், எதிர்மனுதாரர்கள் நிறைவேற்றுகை மனுவில் ஏற்பட்ட எதிரவர்வாரா உத்தரவை நீக்கக்கோரி மனு செய்கின்றனர் - இதற்கிடையில் மனுதாரர்களை விற்பனை ஆவணம் எழுதி நிறைவேற்றும் பொருட்டு ரூ.1,98,000/-க்கு நீதிமன்றமில்லா முத்திரைதாளை வைப்பு செய்ய கோரப்படுகின்றனர் - அதன்படியே மனுதாரர்களும் மேற்படி வைப்பு செய்து விற்பனை பத்திரமானது எழுதிக் கொடுத்து நிறைவேற்றப்பட்டது - அதன் பின்னர் தான் எதிர்மனுதாரர்கள் 862 நாட்கள் கால தாமதத்தை மன்னித்து அனுமதித்தும் வழக்கில் ஏற்பட்ட எதிரவர் வாரா தீர்ப்பாணையை நீக்கக்கோரி விண்ணப்பித்தனர் - இந்த மனுவானது விசாரணை நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. பாதிக்கப்பட்ட எதிர்மனுதாரர்கள் உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 115-ன் கீழ் உயர்நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்தனர் - காப்பாளர் நியமனம் குறித்து தொடர்பாக ஐயம்கொண்டு வழக்குக் கோப்புகளை வரவழைக்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது - வாதுரையுடன் இளவருக்கு

காப்பாளர் நியமிக்கும் பொருட்டு தாக்கல் செய்யப்பட்ட மனுவானது முறையாக உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 32 விதி 3-ல் சொல்லியுள்ளவாறு உரிய முறையில் விசாரணை செய்யாமல் இருந்ததைக் கண்டறிந்து உயர்நீதிமன்றமானது காலதாமதத்தை மன்னிக்க போதிய காரணங்கள் உள்ளதா என்ற ஆராய்ச்சிக்கு செல்லாமல் இந்திய அரசியலைமைப்புச் சட்டம் உறுப்பு 227-ன் கீழ் தனக்கு உள்ள மேற்பார்வை அதிகாரத்தை பயன்படுத்தி நேரடியாக வழக்கில் ஏற்பட்ட ஒரு எதிரவர் வாரா தீர்ப்பாணையை நீக்கியது - தீர்ப்பாணைக்கு பின் (தீர்ப்பாணையால்) மனுதாரர்களுக்கு பண இழப்பு ஏற்படுவதை தடுக்கும் விதமாக, ஏற்கனவே மனுதாரர்கள் / தீர்ப்பாணையை பெற்றவர் முத்திரைதாளை வைப்பு செய்தும், விற்பனை ஆவணம் நிறைவேற்றப்பட்டுள்ள சூழ்நிலையிலும் உயர்நீதிமன்றம் எதிர்மனுதாரர்கள், மனுதாரர்களுக்கு ரூ.2,50,000/- செலவு தொகையாக வழங்க உத்தரவிட்டது - எதிர்மனுதார்கள் ரூ.2,50,000/-த்தை மேற்படி வைப்பு செய்தனர் - இதன் விளைவாக, விசாரணை நீதிமன்றம் வழக்கெழுவினாக்களை வனைந்த பின்னர் வழக்கை விசாரணைக்கு எடுத்தது - பாதிக்கப்பட்ட மனுதாரர்கள் உடனே சிறப்பு அனுமதி மனுவை தாக்கல் செய்தனர்.

முடிவு செய்யப்பட்டது: எதிர்மனுதாரர்கள் வழக்கையும் நிறைவேற்றுகை மனுவையும் எதிர்கொள்வதில் மிகவும் கவனமின்மையுடன் இருந்துள்ளனர் என்ற பொருண்மையில் எந்த சந்தேகமும் இல்லை - ஆனால் விசாரணை நீதிமன்றம் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு இளவருக்கு காப்பாளர் நியமனம் செய்ய தவறியது என்ற பொருண்மையை உயர்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றத்தின் கோப்புகளை வரவழைத்து

ஆராய்ந்ததில் கண்டறிந்தது - மனுதாரர்கள் வழக்குரையுடன் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 32 விதி 3-ன் கீழ் மனு தாக்கல் செய்திருந்தனர் - விசாரணை நீதிமன்றம் அந்த மனுவை தீர்மானித்து முடித்துள்ளது - விசாரணை நீதிமன்றம் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 32 விதி 3-ன் கீழ் மனுவை முடிவுக்கு கொண்டு வந்த முறை முறையற்றது மற்றும் சட்டத்தில் நிலை நிற்கத்தக்கதல்ல - உயர்நீதிமன்றமானது உண்மையில் காலவரையறை சட்டம் 1963 பிரிவு 5-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணை நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்ட உத்தரவை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட சீராய்வு மனுவின் மீது தான் விசாரணை செய்தது என்பது உண்மைதான் - ஆனால் நடைமுறை தொடர்பாக குறிப்பாக இயலாமையில் இருக்கும் ஒரு நபர் குறித்து விசாரணை நீதிமன்றத்தின் கோப்புகளை வரவழைத்து ஆராயும் உயர்நீதிமன்றத்தின் அதிகார வரம்பை அது எந்த விதத்திலும் பறித்துவிடவோ, தடுத்துவிடவோ இயலாது. மெட்ராஸ் உயர் நீதி மன்றத்தின் கட்டளை 32 விதி 3-ன் கடுமையான தன்மை என்பது பரந்த அதிகார வரம்புடன் தொடர்பு உள்ளது என்பதால் உரிமைபட்டயம் கூறு 17-ன் கீழ் உயர் நீதிமன்றம் அதன் அசல் அதிகார வரம்பை செயல்படுத்துகிறது மற்றும் அதிகாரம் என்பது ஒரு நீதிமன்றம் இளவருக்கான வழக்குளை நடத்தும்போது சாதாரணமாக செயல்படுத்துவதுதான், அதனால், உயர்நீதிமன்றம் வழக்கில் அசல் ஆவணங்களை கேட்டும் இளவர் பிரதிவாதியின் காப்பாளர் கட்டளை 32 விதி 3-ன் கீழ் உரிய முறையில் நியமிக்கப்பட்டிருக்கிறதா இல்லையா என்று அறிவதற்கும் எடுத்துள்ள உயர்நீதிமன்றத்தின் நடவடிக்கை பொறுத் மனுதாரர்கள் குறிப்பிட்டு விவரங்களை முன்னிருத்தி இருக்கிறார்கள் என்ற விவரங்கள் இல்லா நிலையில்

உயர்நீதிமன்றத்தின் நடவடிக்கைகளில் சட்டத்திற்கு புறம்பான விஷயங்கள் எதையும் நாங்கள் கண்டறியவில்லை - உயர்நீதிமன்றம் இந்திய அரசியலமைப்பு சட்டம் கூறு 227-ன் கீழ் காலவரையறை சட்டம் 1963 பிரிவு 5-ன் கீழ் செய்த மனுவை தள்ளுபடி செய்த உத்தரவின் மீது விசாரிக்கும் போது வழக்கில் ஏற்பட்ட எதிரவர் வாரா தீர்ப்பையே நீக்க முடியாது என்ற வாதம் எற்புடையதல்ல. இந்திய அரசியலமைப்புச் சட்டம் கூறு 227-ன் கீழ் உயர்நீதிமன்றத்தின் அதிகாரமானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 115-ன் கீழ் உள்ள அதிகாரத்தை விட கூடுதல் அதிகாரமும், பரந்த அதிகாரமும் கொண்டுள்ளவை என்பது சட்டத்தில் நன்கு முடிவான ஒரு நிலையாகும் - உயர்நீதிமன்றம் கூறு 227-ஐ பயன்படுத்தி வழக்கில் எற்பட்ட எதிரவர் வாரா தீர்ப்பை நீக்க அதிகார வரம்பை பயன்படுத்தியதில் எந்த தவறும் இல்லை - உண்மையில் உயர்நீதிமன்றம் ஒரு இளவருக்கு முறையான காப்பாளர் நியமிக்கப்படாமலேயே இளவருக்கு எதிராக ஏற்பட்ட எதிரவர் வாரா தீர்ப்பானது வெறும் அந்த பொருண்மை அடிப்படையிலேயே இல்லா நிலையது ஆகுமா அல்லது அந்த இளவருக்கு ஏதும் பாதிப்பு ஏற்படுவதை பொறுத்து உள்ளதா என்ற கேள்விக்கு விசாரணை செய்துள்ளது - மேலும் உயர்நீதிமன்றம் இந்த வழக்கில் இளவர் பாதிப்படைந்துள்ளர் என்ற பொருண்மையை கண்டறிந்தது.

சிறப்பு அனுமதி மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

முடிவு செய்யப்பட்டது: 1. எதிர்மனுதாரர்கள் வழக்கு மற்றும் நிறைவேற்றுகை மனுவை எதிர்கொள்வதில் மிகவும் கவனக்குறைவாக இருந்துள்ளனர் என்ற பொருண்மையில் எந்தவொரு சந்தேகமும் இல்லை. தரப்பினர்கள் கவனக்குறைவாக

இருக்கலாம். ஆனால் நீதிமன்றம் கவனக்குறைவாக இருக்க முடியாது. விசாரணை நீதிமன்றமானது 3-ஆம் பிரதிவாதியான இளவருக்கு காப்பாளரை முறையாக சட்டத்தில் குறிப்பிட்டுள்ள வகையில் நியமிக்க தவறியது என்ற பொருண்மையை உயர்நீதிமன்றம் வழக்கு கோப்புகளை வரவழைத்து பார்த்தபோது தான் கண்டறிந்தது. உண்மையில் இந்த மனுதாரர்கள் / வாதிகளால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 32 விதி 3-ன் கீழ் ஒரு இடைநிலை மனு எண் 981/2013 தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி மனுவானது 23.03.2014 அன்று விசாரணை நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், விசாரணை நீதிமன்றம் மேற்படி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 32 விதி 3-ன் படியான மனுவை முடித்து வைத்த முறை முறையற்றது மற்றும் குறிப்பாக மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் சட்ட திருத்தத்தின் பார்வையில் நிலை நிற்கக்கதக்கதல்ல என்பதில் எந்த ஐயமும் இல்லை. [பத்தி 14] [358-D-G]

2. கட்டளை 32 விதி 3 ஆனது உரிமையியல் நடைமுறைச்சட்டம் முதல் அட்டவணையில் அடங்கியுள்ளது. உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 121-ன் கீழ் முதல் அட்டவணையில் கண்டுள்ள விதிகள் உரிமையியல் நடைமுறைச் சட்டம் அங்கமாக இயற்றப்பட்டது போலவே அவை நீக்கம் செய்யப்படும் வரை பிரிவு 121 முதல் 131 வரை அடங்கியுள்ள பகுதி X-ற்கு உட்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். உயர்நீதிமன்றங்களுக்கு உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 122-ன் கீழ் முதல் அட்டவணையில் கண்டுள்ள ஏதாவது அல்லது அனைத்து விதிகளை நீக்கவும், திருத்தவும் உயர்நீதிமன்றங்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி விதியின் அதிகாரத்தை

பயன்படுத்தி மெட்ராஸ் உயர்நீதிமன்றமானது அசலாக இயற்றப்பட்ட கட்டளை 32 விதி 3-ஐ விரிவாக்கியது. [பத்திகள் 15, 16] [358- G-H; 359-A-B].

3. நீதிபதி அவர்கள் குறையுற்ற ஆணையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 32 விதி 3-ஐ அதன் அசல் வடிவத்தில் அதை பயன்படுத்தி உள்ளார். மத்திய சட்டத்தின் கீழ் கட்டளை 32 விதி 3-ல் உள்ள நடைமுறை விதிகளுக்கும் மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் மேற்பார்வைக்கு உட்பட்ட உரிமையியல் நீதிமன்றங்களுக்கான விதி 3-ல் உள்ள நடைமுறைகளுக்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன. இரண்டு வகையான விதிகளை ஒப்பிட்டு பார்க்கும்போது மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தில் நீதிமன்றங்களை நிர்வகிப்பதற்கு உரிய விதிகள் விரிவாகவும், கடினமாகவும் உள்ளது. (i) மெட்ராஸ் உயர்நீதிமன்றம் நீதிமன்றங்களை நிர்வகிப்பதற்கு உரிய விதிகளான விதி 3 உள் விதிகள் 1 மற்றும் 2 ஆகியவை கூடுதல் தேவைகள் தொடர்புடையவை, வசதிக்காக இந்த விபரங்கள் இனிமேல் "பொருந்தக் கூடிய விதிகள்" என்று பரிசீலிக்கப்படுகிறது. (ii) விதி 3 துணை விதி 3 என்ற பொருந்தக்கூடிய விதிகள் அசல் சட்டத்தில் விதி 3 துணை விதி 1-ன் மீள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. (iii) விதி 3 துணை விதி 3 (A) என்ற பொருந்தக்கூடிய விதிகள் என்பது மத்திய சட்டம் துணை விதி 5-ன் மீள் உற்பத்தி ஆகும். (iv) விதி 3 துணை விதி 7 என்ற பொருந்தக்கூடிய விதிகள் மத்திய சட்டம் விதி 3 துணை விதி 4-ல் மேம்படுத்தப்பட்ட பதிவு. [பத்திகள் 17, 18, 19] [359-B-C: 362- G-H: 363-G-H: 364-A-D]

4. மிக முக்கியமான கட்டளை 32 விதி 3-ன் துணை விதிகள் (4), (5), (6) மற்றும் (7)-ன் ஒரு பகுதி சில கூடுதல் கீழ்க்கண்ட தேவைகளை வரையறை செய்துள்ளது. (i)

வாதியால் ஒரு இளவர் பிரதிவாதிக்கு காப்பாளர் நியமன மனு தாக்கல் செய்யப்படும் போது அந்த மனுவில் தகுதியுடையை நபர்களின் பட்டியல் அழைப்பாணை சார்வு செய்வதற்காக முழு முகவரியும் இணைப்பு H-ல் உள்ள படிவம் 11-A-ன் படி இணைக்கப்பட வேண்டும்; (ii) காப்பாளர் நியமிக்ககோரும் விண்ணப்பமானது பிரமாண வாக்குமூலத்துடன் தாக்கல் செய்யப்பட வேண்டும். காப்பாளராக நியமனம் செய்யப்பட கோரும் நபர் அந்த வழக்கின் சங்கதிகளில் எந்த அக்கறையும் இல்லாதவராகவும் இளவரின் நலன்களுக்கு எதிராக அக்கறை எதையும் கொண்டிருக்கவில்லை என்று (மத்திய சட்டத்தில் உள்ளவாறு) உறுதி செய்யப்பட வேண்டும். மேலும் அந்த இளவரின் நிகழ்நிலை காப்பாளரின் பெயர் மற்றும் முகவரியுடன் சேர்த்து அவர் ஏன் காப்பாளராக செயல்பட அனுமதிக்கப்படவில்லை என்பதையும் குறிப்பிட வேண்டும். இயற்கை காப்பாளர் அல்லது நிகழ்நிலை காப்பாளர்கள் இல்லாதபட்சத்தில் தகுதியான நபர்களை நியமனம் செய்ய வேண்டுவதற்காக தக்க நபர்களின் பெயர் மற்றும் முகவரி உள்ளிட்ட கூடுதல் விவரங்களும் தெரிவித்து ஒரு பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்படவேண்டும். [பத்தி 20] [364-B-D]

5. ஒப்புக்கொள்ளப்பட்டபடி, கற்றறிந்த நீதிபதி அவர்கள் விசாரணை நீதிமன்றத்தில் இந்த 3-ம் இளவர் பிரதிவாதிக்கு உரிய முறையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 32 விதி 3-ல் சொல்லியுள்ளவாறு உரிய முறையில் காப்பாளரை நியமனம் செய்ய விசாரணை நீதிமன்றம் தவறிவிட்டதை கருத்தில் கொண்டும் அந்த ஆவணங்களை வரவழைத்துள்ளார்கள். உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 115 (1)-ன் கீழ் சீராய்வு மனு விசாரணையில் கோப்புகளை

வரவழைப்பதும் அதனை ஆராய்வதும் நீதிபதியின் அதிகாரத்தை மனுதாரர்கள் கேள்வி எழுப்பவோ, சந்தேகிக்கவோ முடியாது. உயர்நீதிமன்றமானது உண்மையில் காலவரையறைச் சட்டம் 1963 பிரிவு 5-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணை நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்ட உத்தரவை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட சீராய்வு மனுவின் மீது தான் விசாரணை செய்தது என்பது உண்மைதான். ஆனால், ஒரு நடைமுறையின் முக்கியமான விதியைக் குறித்து காட்டுகின்ற, குறிப்பாக இயலாமையுடைய சில நபர்களின் தனிப்பட்ட குறிப்புகள் கொண்ட பதிவுறுகளை காணும், உயர் நீதிமன்றத்தின் அதிகார வரம்பை அது பறிக்கவோ அல்லது குறைக்கவோ செய்யாது. மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் கட்டளை 32 விதி 3 என்ற கடுமையான தன்மை என்பது பரந்த அதிகார வரம்புடன் தொடர்பு உள்ளது என்பதால் உரிமை பட்டயம் கூறு 17-ன் கீழ் உயர் நீதிமன்றம் அதன் அசல் அதிகார வரம்பை செயல்படுத்துகிறது மற்றும் அதிகாரம் என்பது ஒரு நீதிமன்றம் இளவருக்கான வழக்குளை நடத்தும்போது சதாரணமாக செயல்படுத்துவதுதான். ஆதனால், உயர்நீதி மன்றம் வழக்கில் அசல் ஆவணங்களை கேட்டும் இளவர் பிரதிவாதியின் காப்பாளர் கட்டளை 32 விதி 3-ன் கீழ் உரிய முறையில் நியமிக்கப்பட்டிருக்கிறதா இல்லையா என்று அறிவதற்கும் எடுத்துள்ள உயர் நீதிமன்றத்தின் நடவடிக்கை பொருத்து மனுதாரர்கள் குறிப்பிட்டு விவரங்களை முன்னிருத்தி இருக்கிறார்கள் என்ற விவரங்கள் இல்லா நிலையில் உயர்நீதிமன்றத்தில் நடவடிக்கையில் சட்டத்திற்கு புறம்பான விஷயங்கள் எதையும் நாங்கள் கண்டறியவில்லை. [பத்தி 21] [364- D-H; 365-A].

6. உயர்நீதிமன்றம் அரசியல் அமைப்பு சட்டம் கூறு 337-ன் கீழ் காலவரையறை சட்டம் பரிவு 5-ன் கீழ் செய்த மனுவை தள்ளுபடி செய்த உத்தரவின் மீது விசாரிக்கும் போது வழக்கில் ஏற்பட்ட எதிரவர் வாரா தீர்ப்பையோ நீக்க முடியாது என்ற வாதம் ஏற்புடையதல்ல. இந்திய அரசியலமைப்புச் சட்டம் கூறு 227-ன் கீழ் உயர்நீதிமன்றத்தின் அதிகாரமானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 115-ன் கீழ் உள்ள அதிகாரத்தினை விட கூடுதல் அதிகாரமும், பரந்த அதிகாரமும் கொண்டுள்ளது என்பது சட்டத்தில் நன்கு முடிவான ஒரு நிலையாகும். உயர்நீதிமன்றம் கூறு 227-ஐ பயன்படுத்தி வழக்கில் ஏற்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பையே நீக்க அதிகார வரம்பை பயன்படுத்தியதில் எந்த தவறும் இல்லை. உண்மையில் உயர்நீதிமன்றம் ஒரு இளவருக்கு முறையான காப்பாளர் நியமிக்கபடாமலே இளவருக்கு எதிராக ஏற்பட்ட எதிரவர் வாரா தீர்ப்பானது வெறும் அந்த பொருண்மை அடிப்படையிலேயே இல்லா நிலையது ஆகுமா அல்லது அந்த இளவருக்கு ஏதும் பாதிப்பு ஏற்படுவதை பொறுத்து உள்ளதா என்ற கேள்விக்கு விசாரணை செய்துள்ளது. மேலும் உயர்நீதிமன்றம் இந்த வழக்கில் இளவர் பாதிப்படைந்துள்ள பொருண்மையை கண்டறிந்துள்ளது; [பத்திகள் 22, 23] [365-A-B : D-E].

சூரிய தேவ் ராய் /எதிர்/ ராம் சந்தர் ராய் மற்றும் பலர் (2003) 6 SCC 675 : [2003] 2 Suppl, SCR 290: ராதே ஷ்யாம் மற்றும் ஒருவர் /எதிர்/ சாபிநாத் மற்றும் பலர் (2015) 5 SCC 423 : [2015] 3 SCR 197 ஆகிய வழக்குகள் சுட்டிக்காட்டப்பட்டது.

லங்கா சான்யாசிவ் லங்கா எர்ரன் நாயுடு 1929 Law Weekly 455: திவ்யா தீப் சிங் மற்றும் பலர் /எதிர்/ ராம்பச்சன் மிஸ்ரா மற்றும் பலர் (1997) 1 SCC 504: [1996] 7 Suppl. SCR 705: அனந்தராம் மற்றும் ஒருவர் /எதிர்/ மதோலால் மற்றும் பலர் AIR 1960 Raj 189: ரெங்கம்மாள் /எதிர்/ மைனர் அப்பாசாமி 85 Law weekly 574 ஆகிய வழக்குகள் வேறுபடுத்தப்பட்டது.

அவுசப் ஜோசப் /எதிர்/ தாமா எதம்மா AIR 1956 TC 26 என்ற வழக்கு பொருந்தாது என முடிவு செய்யப்பட்டது.

சுட்டிக் காண்பிக்கப்பட்ட தீர்ப்பு வழி சட்டம்

[2003] 2 Suppl. SCR 290	சுட்டிக்காட்டப்பட்டது	Para 22
[2015] 3 SCR 197	சுட்டிக்காட்டப்பட்டது	Para 22
[1996] 7 Suppl. SCR 705	வேறுபடுத்தப்பட்டது	Para 31

உரிமையியல் மேல் முறையீட்டு அதிகார வரம்பு: சிறப்பு அனுமதி மனு (உரிமையியல்) எண் 2492/2021

உரிமையியல் சீராய்வு மனு (என்.பி.டி.) எண் 959/2018-இல் மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் 14.09.2020 தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து எழுகிறது.

மனுதாரர்களுக்கான வழக்குரைஞர்கள் - எஸ்.நாகமுத்து, மூத்த வழக்குரைஞர் & எம்.பி.பார்த்திபன்.

எதிர்மனுதாரர்களுக்கான வழக்குரைஞர்கள் - எம்.அ.சின்னசாமி, சி.ரூபாவாதி, எம்.வீரராகவன், சி.எச்.லீலா சர்வேஸ்வர், வி.செந்தில்குமார் & பி.ராஜாராம்

தீர்ப்புரை

மாண்பமை நீதியரசர் திரு.V. ராமசுப்பிரமணியம்

1) உரிமையியல் நடைமுறைச்சட்டம், 1908 (சுருக்கமாக "சட்டம்") பிரிவு 115-ன் கீழ் சீராய்வு மனு மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஏற்றது ஆற்றுகை பரிகாரம் கோரிய வழக்கில் விசாரணை நீதிமன்றம் பிறப்பிக்கப்பட்ட எதிரவர் வாரா தீர்ப்பாணையை நீக்க கோரிய மனுவோடு தாக்கல் செய்யப்பட்ட 862 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்க கோரிய மனுவை ஏற்க மறுத்து தள்ளுபடி செய்து விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கு எதிராக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி மனுவை விசாரித்த உயர்நீதிமன்றமானது இளவருக்காக காப்பாளர் முறையாக உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 32 விதி 3-ல் குறிப்பிட்டுள்ள படி உரிய முறையில் நியமிக்கப்படாத நிலையில் பிறப்பிக்கப்பட்டுள்ள எதிரவர் வாரா தீர்ப்பாணையை இல்லா நிலையதாக்கியது. உயர்நீதிமன்றம் அரசியலமைப்புச் சட்டம் கூறு 227-ன் படி மேற்பார்வை அதிகாரத்தின் கீழ் வழக்கில் ஏற்பட்ட எதிரவர் வாரா தீர்ப்பை ரத்து செய்தும், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ரூ.2,50,000/-த்தை முத்திரை தாள் வாங்கியது உட்பட இதர செலவுகளையும் சேர்த்து தீர்ப்பாணை பெற்றவருக்கு வழங்க

உத்தரவிட்டது. மேற்படி உயர் நீதிமன்றத்தின் உத்தரவால் பாதிக்கப்பட்டு, தீர்ப்பாணை பெற்றவர்கள் நீதிமன்றத்தில் இந்த சிறப்பு அனுமதி மனுவினை தாக்கல் செய்துள்ளனர்.

2) கற்றறிந்த மூத்த வழக்கறிஞர் திரு.எஸ்.நாகமுத்து அவர்கள் மனுதாரர்கள்/வாதிகளுக்காகவும் கற்றறிந்த மூத்த வழக்கறிஞர் திரு.ஆர்.பாலசுப்ரமணியன் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு ஆஜராகி தங்களது வாதங்களை எடுத்துரைத்தனர்.

3) இந்த மனுதாரர்கள் கடந்த 25.04.2011 தேதியிட்ட விற்பனை ஒப்பந்தத்தை நிறைவேற்றக்கோரி ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கில் (அசல் வழக்கு எண் 264/2013) எதிர்மனுதாரர்களுக்கு முறையே அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது அவர்கள் வழக்கறிஞர் மூலம் ஆஜாகியும் பின்னர் தோன்றாத் தரப்பினர்களாக இருந்த காரணத்தால் விசாரணை நீதிமன்றமானது கடந்த 08.04.2015 அன்று எதிரவர் வாரா தீர்ப்பாணையை வழங்கியுள்ளது.

4) இந்த நிலையில் குறிப்பிடத்தக்க பொருண்மை என்னவென்றால் மனுதாரர்கள் நீதிமன்றம் ஒருவேளை ஏற்றதை ஆற்றுக பரிகாரம் வழங்காமல் போகும் சூழலில் அதற்கு மாற்று பரிகாரமாக மனுதாரர்கள் எதிர்மனுதாரர்களுக்கு கொடுத்துள்ள தொகையை ஆண்டுக்கு வட்டியாக 18% உடன் வழங்கக்கோரி மனுதாரர்கள் கேட்டிருந்தனர். ஆனால், விசாரணை நீதிமன்றம் காரணங்கள் ஏதுமின்றி மனுதாரர்கள் ஏற்றதை ஆற்றுக பரிகாரம் பெற தகுதியானவர்கள் என்று தீர்ப்பாணை வழங்கியுள்ளது.

5) மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வாதுரையில் 3-வது பிரதிவாதியானவர் எம்.சம்பத்குமார் அவர்களின் மகன் "16 வயதுடைய இளவர் எஸ்.அரவிந்தராஜன் அவருக்காக அவரது வழக்கு துணை நண்பராக தந்தை எம்.சம்பத்குமார்" என்று விவரிக்கப்பட்டுள்ளது. எனவே, வாதுரையுடன் மனுதாரர்கள் இடைநிலை மனு எண் 981/2013 என்ற இடைகால மனுவையும் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 32 விதி 3-ன் கீழ் இளவருக்கு காப்பாளராக இரண்டாவது எதிர்மனுதாரரை (தந்தையை) நியமிக்ககோரி தாக்கல் செய்திருந்தனர். உயர்நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது போல் விசாரணை நீதிமன்றம் இரண்டாவது பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்பு செய்து கீழ்க்கண்டவாறு இடைநிலை மனு எண் 989/2013-ல் 23.03.2014 அன்று உத்தரவிட்டது.

> “படி சார்பு செய்யப்பட்டது. இளவருக்காக அவரது காப்பாளர் வக்காலத்து தாக்கல் செய்துள்ளார். எனவே, இந்த மனு முடித்து வைக்கப்பட்டது.”

6) தீர்ப்பாணையை நிறைவேற்றக்கோரி நிறைவேற்றுகை மனு (நிறைவேற்றுகை மனு எண் 33/2015) மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் அறிவிப்புகள் எல்லா எதிர்மனுதாரரர்களுக்கும் அறிவிப்பு சார்பு செய்யப்பட்டு, நிறைவேற்றுகை மனுவானது டிசம்பர் 2015-ஆம் ஆண்டில் இரண்டு தேதிகளிலும், 2016-ஆம் ஆண்டில் பல தேதிகளில் விசாரணைக்கு வந்து கடைசியாக பிரதிவாதிகள் 18.10.2016 அன்று தோன்றா தரப்பினர்களாக அறிவிக்கப்பட்டு நிறைவேற்றுகை மனுவானது அனுமதிக்கப்பட்டுள்ளது.

7) அதன்பின்னர், பிரதிவாதிகள் நவம்பர் 2016-ஆம் ஆண்டு நிறைவேற்றுகை மனுவில் ஏற்பட்ட எதிரவர் வாரா உத்தரவை நீக்கக்கோரி விண்ணம் செய்து அது 2017-ஆம் ஆண்டு நிறைவேற்றுகை விண்ணப்ப எண் 40/2017 வழங்கப்பட்டுள்ளது.

8) ஆனால் இதற்கிடையில் மனுதாரர்களை ரூ.1,98,000/-ற்கான நீதித்துறை சாரா முத்திரைத்தாளை விற்பனை பத்திரம் எழுதி நிறைவேற்றுவதற்காக வைப்பு செய்ய கோரப்பட்டது. அதன்படியே மனுதாரர்களும் மேற்படி வைப்பு செய்து விற்பனை பத்திரமானது நீதிமன்றத்தால் 04.01.2017ல் எழுதிக்கொடுத்து நிறைவேற்றப்பட்டுள்ளது.

9) அதன் பின்னர் பிரதிவாதிகள் எதிரவர் வாரா தீர்ப்பாணையை நீக்கறவு செய்ய விண்ணப்பிப்பதில் ஏற்பட்ட 862 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்கக்கோரியும் 19.09.2017-ஆம் தேதியன்று மனு தாக்கல் செய்துள்ளனர், அது இடைநிலை மனு எண் 142/2017 ஆகும். மேற்படி மனுவை 28.11.2017 அன்று விசாரணை நீதிமன்றம் கீழ்க்கண்ட மூன்று முதன்மை காரணங்களுக்காக தள்ளுபடி செய்தது. (i) காலதாமதத்திற்கு போதுமான விளக்கம் தரப்படவில்லை. (ii) உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 7-ன் படி குறிப்பிட்ட காலத்திற்குள் எதிர்வழக்குரையும் தாக்கல் செய்யப்படவில்லை. (iii) நிறைவேற்றுகை மனு எதிரவர் வாரா உத்தரவு செய்யப்பட்ட நிலையிலும், மேலும் நிறைவேற்றுகை நீதிமன்றம் விற்பனை ஆவணம் எழுதிக்கொடுத்த பிறகும் மேற்படி பிரதிவாதிகள் நீண்டநாள் காலதாமதத்தை மன்னிக்க கோர இயலாது.

10) காலதாமதத்தை மன்னிக்கக்கோரி தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்த உத்தரவை எதிர்த்து பிரதிவாதிகள் உயர்நீதிமன்றத்தில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 115-ன் கீழ் சீராய்வு மனு தாக்கல் செய்தனர். மூன்றாவது பிரதிவாதிக்கு காப்பாளர்

நியமனம் தொடர்பாக ஏற்பட்ட ஐயப்பாடு காரணமாக கற்றறிந்த நீதியரசர் அவர்கள் விசாரணை நீதிமன்றத்திடம் வழக்கின் அசல் கோப்புகளை வரவழைக்கக்கோரி கேட்டுள்ளார்கள். வாதுரையுடன் இளவருக்காக காப்பாளர் நியமிக்கும் பொருட்டு தாக்கல் செய்யப்பட்ட இடைநிலை மனு எண் 981/2013 மனுவானது முறையாக விசாரணை செய்யாமலும் கட்டளை 32 விதி 3-ல் குறிப்பிட்டுள்ளவாறு இளவருக்கு உரிய முறையான காப்பாளர் நியமிக்கப்படாததை கண்டறிந்ததால் காலதாமதத்தை மன்னிக்கும் பொருட்டு போதிய காரணங்கள் உள்ளதா என்ற ஆராய்ச்சிக்கு செல்லாமல் இந்திய அரசியலமைப்புச் சட்டம் கூறு 227-ன் கீழ் உள்ள மேற்பார்வையிடுவதற்கான அதிகாரத்தை பயன்படுத்தி உயர்நீதிமன்றம் நேரடியாக எதிரவர் வாரா தீர்ப்பாணையை நீக்கியது. தீர்ப்பாணைக்கு பின் (தீர்ப்பாணையால்) மனுதாரருக்கும் இழப்பு ஏற்படுவதை தடுக்கும் விதமாக ஏற்கனவே மனுதாரர்/தீர்ப்பாணையை பெற்றவர் ரூ.1,98,000/-த்திற்கான முத்திரைதாளை வைப்பு செய்தும் விற்பனை ஆவணம் நிறைவேற்றப்பட்டுள்ள சூழ்நிலையிலும் உயர்நீதிமன்றம் எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு ரூ.2,50,000/-த்தை செலவு தொகையாக 16.10.2020-ஆம் தேதிக்குள் வழங்க உத்தரவிடப்பட்டது.

11) உயர்நீதிமன்றத்தின் உத்தரவு அடிப்படையில் எதிர்மனுதாரர்கள் வழக்குச் செலவு தொகை ரூ.2,50,000/-த்தை 12.10.2020ம் தேதி வைப்பு செய்தனர். இதன் விளைவாக, விசாரணை நீதிமன்றம் வழக்கெழுவினாக்களை வனைந்து பின்னர் வழக்கை விசாரணைக்கு எடுத்துள்ளது. வழக்கானது தற்போது வ.சா.1 விசாரணைக்காக போடப்பட்டுள்ளது என்று பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆர்.பாலசுப்ரமணியன் அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

12) மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த மூத்த வழக்கறிஞர் திரு.எஸ்.நாகமுத்து அவர்கள் குறையுற்ற உத்தரவை கீழ்க்கண்ட அம்சங்கள் தொடர்பாக கேள்வி எழுப்பியுள்ளார்கள். (i) காலவரையறை சட்டம் 1963 பிரிவு 5-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட சீராய்வு மனுவின் விசாரணையில் எதிரவர் வாரா தீர்ப்பாணையையே நீக்கியிருக்கக்கூடாது (ii) எதிர்மனுதாரர்கள் இந்த வழக்கை நடத்துவதிலும் நிறைவேற்றுகை மனுவை எதிர்த்து நடத்துவதிலும் நிறைவேற்றுகை மனுவில் எதிரவர் வாரா உத்தரவு ரத்து செய்ய கோரிய பிறகு ஓராண்டு கழித்தும் அசல் மனுவில் பிறப்பிக்கப்பட்ட எதிரவர் வாரா தீர்ப்பாணையை ரத்து செய்வதில் கவனமில்லாமல் இருந்த இந்த எதிர்மனுதாரர்களுக்கு தகைமை நெறியின் கோட்பாட்டை கூட இந்த எதிர்மனுதாரர்களுக்கு பயன்படுத்தக் கூடாது. (iii) விசாரணை நீதிமன்றத்தின் தரப்பில் தவறுகை இருக்கும் பட்சத்தில், பிரதிவாதிகளால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 32 விதி 3-ஐ சரியாக பின்பற்றவில்லை என்றும், பிரதிவாதி இளவருக்கு பெருத்த அநீதி விசாரணை நீதிமன்றத்தால் ஏற்பட்டுள்ளது என்றோ, எந்தவொரு வாதமும் எழுப்பப்படவில்லை என்றும் எடுத்துரைத்தார்கள்.

13) இதற்கு பதிலளிக்கும் வகையில் பிரதிவாதிகளுக்காக கற்றறிந்த வழக்கறிஞர் ஆர்.பாலசுப்ரமணியன் அவர்கள் இந்திய அரசியலமைப்புச் சட்டம் கூறு 227-ன் கீழ் உயர்நீதிமன்றங்களின் சீராய்வு மனுவானது இயற்கையாகவே பரந்தது என்றும், சட்டத்தால் வரையறுக்கப்பட்ட நடைமுறையைப் பின்பற்றி, விசாரணை நீதிமன்றம் விசாரணையில் ஒரு தரப்பினரான இளவருக்கான நலனில் அக்கறை காட்டவில்லை

என்பதை அறிந்த உயர்நீதிமன்றம் நுட்பக்கூறுகளின் அடிப்படையில் கண்களை மூடிக்கொண்டு இருக்கமுடியாது என்று எடுத்துரைத்தார்கள்.

14) நாங்கள் எதிர் வாதங்களையும் கவனமாக பரிசீலித்ததில் எதிர்மனுதாரர்கள் வழக்கு மற்றும் நிறைவேற்றுகை மனுவை எதிர்கொள்வதில் மிகவும் கவனக்குறைவாக இருந்துள்ளனர் என்ற பொருண்மையில் எந்தவொரு சச்சரவும் இல்லை. தரப்பினர்கள் கவனக்குறைவாக இருக்கலாம், ஆனால் நீதிமன்றம் கவனக்குறைவாக இருக்கமுடியாது. விசாரணை நீதிமன்றமானது 3-ஆம் பிரதிவாதி, இளவருக்கு காப்பாளரை முறையாக சட்டத்தில் குறித்த வகையில் நியமிக்க தவறிய பொருண்மையை உயர்நீதிமன்றம் வழக்கு கோப்புகளை வரவழைத்து பார்த்தபோது தான் கண்டறிந்தது. உண்மையில் இந்த மனுதாரர்கள்/வாதிகள் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 32 விதி 3-ன் கீழ் ஒரு இடைநிலை மனு எண் 981/2013 தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி மனுவில் 23.03.2014 அன்று விசாரணை நீதிமன்றத்தில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் விசாரணை நீதிமன்றம் மேற்படி கட்டளை 32 விதி 3-ன் மனுவை முடித்து வைத்த முறை முறையற்றது மற்றும் குறிப்பாக மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் சட்ட திருத்தத்தின் பார்வையில் நிலை நிற்கத்தக்கதல்ல என்பதில் எந்த ஐயமும் இல்லை.

15) கட்டளை 32 விதி 3 ஆனது உரிமையியல் நடைமுறைச் சட்டம் முதல் அட்டவணையில் உள்ளது. உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 121-ன் கீழ் முதல் அட்டவணையில் கண்டுள்ள விதிகள் உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் அங்கமாக இயற்றப்பட்டதை போலவே அவை நீக்கம் செய்யப்படும் வரை பிரிவு 121 முதல் 131 வரை அடங்கியுள்ள பகுதி X-ற்கு உட்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

உயர்நீதிமன்றங்களுக்கு உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 122-ன் கீழ் முதல் அட்டவணையில் கண்டுள்ள ஏதாவது அல்லது அனைத்து விதிகளை நீக்கவோ, திருத்தவோ அதன் மேற்பார்வைக்கு உட்பட்டு செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

16) மேற்படி விதியின் அதிகாரத்தை பயன்படுத்தி மெட்ராஸ் உயர்நீதிமன்றமானது அசலாக இயற்றப்பட்ட உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 32 விதி 3-ஐ விரிவாக்கி புதிய விதிகளை இயற்றியுள்ளது.

17) கற்றறிந்த நீதிபதி அவர்கள் குறையுள்ள உத்தரவில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 32 விதி 3-ன் கீழ் அசல் வடிவத்தில் அதை பயன்படுத்தியுள்ளார்கள். மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் மேற்பார்வைக்கு உட்பட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் பொருத்து கட்டளை 32 விதி 3 (1) ஆனது கீழ்க்கண்டவாறு உள்ளது.

---

1. 13-3-1938 தேதியிட்ட புனித ஜோர்ஜ் வர்த்தமானியின் 1938 ஆம் ஆண்டின் 256 ஆம் இலக்க அறிவிக்கையின் மூலம் இந்த திருத்தம் செய்யப்பட்டது. துரதிர்ஷ்டவசமாக, அண்மைக் காலத்தில் வெளியிடப்பட்ட பெரும்பாலான சட்டங்களிலும் மற்றும் உரிமையியல் நடைமுறைச் சட்டம் குறித்த முல்லாவின் 19-வதுபதிப்பிலும் கூட, மெட்ராஸ் திருத்தத்தைப் பொருத்தவரை, அறிவிக்கை எண் மற்றும் தேதி குறிப்பிடப்படவில்லை.

"3. **காப்பாளர் அல்லது அடுத்த நண்பராக இருப்பதற்கான தகுதிகள்**: -

(1) புத்தி சுவாதீனம் உடையவராகவும் உறுதியான மனதுடன், உரிமை வயதை அடைந்திருக்கும் எந்தவொரு நபரும், இளவர் ஒருவரின் அடுத்த நண்பராக அல்லது வழக்குக்காக அவரது பாதுகாவலராக செயல்படலாம்:

அவர் வழக்கின் சங்கதிகளை பொறுத்தும் எந்த அக்கறையும் இல்லாதராகவும், அந்த நபரின் நலன் இளவர் நலனுக்கு முரணாகவும் அவர் ஆதாயம் பெறுதல் கூடாது. அவர் வழக்கின் எதிர்தரப்பினராக இருத்தல் கூடாது"

(2) இளவர் ஒருவருக்கு காப்பாளராக நியமிக்கப்பட்ட அல்லது விளம்பப்பட்ட ஒரு காப்பாளர் இருக்கும் போது அந்த காப்பாளரை தவிர வேறு எந்த நபரும் இளவரின் வழக்கு துணைவராகச் செயல்படுவதற்காகவோ, உரிமை வழக்குக்காக நியமிக்கப்படுதலோ ஆகாது. நீதிமன்றம் பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக இளவர் நலனுக்காக மற்றொரு நபர் செயல்பட அனுமதிக்கப்படுவார் அல்லது நியமிக்கப்படுவார் என்று நீதிமன்றம் கருதும் வரை.

(3) நீதிமன்றத்தால் நியமிக்கப்பட வேண்டிய பாதுகாவலர்கள்:- பிரதிவாதி இளவராக இருந்தால் நீதிமன்றம் அவர் இளவர் என்ற சங்கதியை பற்றி திருப்தி கொள்வதன் பேரில் இளவருக்காக ஒரு சரியான நபரை அவரது வழக்கிற்கான காப்பாளராக இருக்கும்படி நியமிக்க வேண்டும்.

(3A) உள் விதி (3)-இன் கீழ் ஒரு இளவர் உரிமை வழக்குக்கு காப்பாளராக நியமிக்கப்படும் நபர் அவரது நியமனமானது ஓய்வு பெறுதல், நீக்குதல் அல்லது மரணத்தால் முடிவடைந்தாலன்றி அந்த உரிமை வழக்கில் எழுகின்ற மேல்முறையீட்டிலும் சீராய்வு நடவடிக்கைகள் மற்றும் தீர்ப்பாணையை நிறைவேற்றும் நடவடிக்கைகள் மற்றும் அந்த வழக்கிலிருந்து எழும் அனைத்து நடவடிக்கைகளிலும் தொடர்ந்து இருந்து வருதல் வேண்டும்.

4) மேற்படி விண்ணப்பம் வாதியால் தாக்கல் செய்யப்படும்போது தகுதியுள்ள நபர்களின் பட்டியலை வரிசைப்படுத்தி பிரதிவாதிக்கு பாதுகாவலராக இருப்பதற்கான தகுதியினை குறிப்பிட்டு தாக்கல் செய்ய வேண்டும். (இதனுடன் இணைப்பு H படிவம் 11(A)-ல் சொல்லப்பட்டுள்ளவாறு எதிர்மனுதாரர்களுக்கு அறிவிப்பு அனுப்புவதற்கான உரிய விலாசத்தை குறிப்பிட வேண்டும். நீதிமன்றம் சரியான காரணங்கள் இருப்பின் அதனை பதிவு செய்து கொண்டு மேற்படி மனுதாரர் மேற்சொன்ன பட்டியலை தாக்கல் செய்வதிலிருந்து விலக்கு அளிக்கலாம்.

5) பாதுகாவலர் நியமனம் செய்யக்கோரி தாக்கல் செய்யப்படும் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய பிரமாண வாக்குமூலத்தில் இருக்க வேண்டிய சாராம்சங்கள்- வாதியாலோ அல்லது இளவர் பிரதிவாதி சார்பாகவோ மேலே சொன்ன விதிகளின்கீழ் தாக்கல் செய்யப்படும் மனுவுடன் உத்தேசிக்கப்பட்டுள்ள பாதுகாவலர் இளவருடைய அக்கறைக்கு விரோதமான எந்த அக்கறையும் கொண்டிருக்கவில்லை எனவும், அவ்வாறு

நியமிக்கப்படுவதற்கு தகுதியான ஆள் என்ற சங்கதிகளுக்கு உறுதிமொழி அளிக்கும் வகையில் ஒரு பிரமாணபத்திரத்தை தாக்கல் செய்ய வேண்டும். மேலும் அந்த பிரமாண பத்திரத்தில் ஒவ்வொரு வழக்கிலும் (அ) தற்போது நியமனம் செய்யப்பட்டுள்ள பாதுகாவலர் அல்லது தகுந்த நீதிமன்றத்தால் பாதுகாவலராக விளம்புகை செய்யப்பட்டவர் (ஆ) நிகழ்நிலை பாதுகாவலர் யாரேனும் இருக்கும் பட்சத்தில் பெயர் மற்றும் அவருடைய விலாசங்கள் (இ) இயற்கை காப்பாளர் அல்லது நிகழ்நிலை காப்பாளர் அல்லது தகுதியான அதிகாரத்தால் நியமனம் செய்யப்பட்ட அல்லது விளம்புகை செய்யப்பட்ட காப்பாளர், ஏதேனும் உறவுமுறையின் காரணமாக அல்லது விடையபொருளின் அக்கறையின் காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்தினால் பாதுகாவராக இருக்க அனுமதி அளிக்கப்படாதபோது வழக்கில் இளவருக்கு காப்பாளராக செயல்பட பொருத்தமான நபர்களை குறிப்பிட வேண்டும்.

6) இறந்துபோன தரப்பினருடைய சட்டபூர்வ பிரதிநிதிகளை நியமனம் செய்யக்கோரும் மனுவிலிருந்து இந்த பாதுகாவலர் நியமனம் செய்யும் விண்ணப்பம் தனியான விண்ணப்பமாக இருக்க வேண்டும்:- இறந்துபோன வாதி அல்லது பிரதிவாதிகளின் சட்டப்பூர்வமான பிரதிநிதிகளை வழக்கில் சேர்க்ககோரும் விண்ணப்பத்தோடு வழக்கில் இந்த இளவருக்காக காப்பாளரை நியமனம் செய்யக்கோரும் விண்ணப்பத்தினை இணைக்கப்படகூடாது. தனித்தனியான மனுக்களாகதான் இருக்க வேண்டும்.

7) இளவர் பிரதிவாதிக்கு பாதுகாவலரை நியமனம் செய்யக்கோரும் மனுவில் உத்தேச பாதுகாவலரை தவிர அக்கறையுள்ள நபர்களுக்கு அறிவிப்பு கொடுக்க வேண்டும்:- உள்விதி (4)-ன் கீழ் தாக்கல் செய்யப்படும் மனுக்களை பொறுத்தவரையில் தகுதியுள்ள அதிகாரத்தில் உள்ளவர் இளவருக்கு பாதுகாவலராக நியமனம் செய்யப்பட்டிருந்தாலோ அல்லது பாதுகாவலராக விளம்புகை செய்யப்பட்டிருந்தாலோ அல்லது பாதுகாவலர் இல்லாத பட்சத்தில் அந்த விண்ணப்பம் தொடர்பான அறிவிப்பை தந்தை அல்லது இளவரின் இயற்கை காப்பாளர் தந்தை அல்லது இயற்கை காப்பாளர் இல்லாத பட்சத்தில் அந்த இளவர் யாருடைய பொறுப்பில் உள்ளாரோ அவர்களுக்கு அறிவிப்பு கொடுக்காமலும் மற்றும் உள்விதியில் சொல்லப்பட்டுள்ள அறிவிப்பு சார்வாகாததன் பேரில் தரப்பில் செய்யப்படும் ஆட்சேபனையை கேட்காமல் எந்த உத்தரவும் பிறப்பிக்கக் கூடாது. உள்விதியில் சொல்லப்பட்டுள்ள அறிவிப்பினை விசாரணைக்கு முன்னதாக முழுமையாக 6 நாட்கள் கால அவகாசம் வழங்கும் வகையில் கொடுக்கப்பட வேண்டும். மேலும், இணைப்பு H-ல் படிவம் 11-ல் சொல்லப்பட்டுள்ளதுபோல் இருக்க வேண்டும்.

8) பாதுகாவலர் நியமனம் செய்யப்படுவதில் ஏற்படும் காலதாமதத்தை குறைக்கும் வகையிலான சிறப்பு விதி:- விண்ணப்பம் வாதியால் தாக்கல் செய்யப்படும்போது விண்ணப்பத்துடன் விதிகள் 4 மற்றும் 5-ல் சொல்லப்பட்டுள்ளவாறு தேவையான படிவங்கள் நகல்களுடன் தாக்கல் செய்யப்பட வேண்டும். விதி 4-ல் சொல்லப்பட்டுள்ள பட்டியலில் உள்ள

நபர்களில் குறைந்தபட்சம் 2 நபர்களுக்கு ஒரே நேரத்தில் அறிவிப்பு அனுப்பும் வகையில் அதற்குரிய முத்திரைக் கட்டணத்திற்குரிய தொகையை செலுத்தி அதனுடைய செலவு சீட்டை (வவுச்சர்) இணைக்க வேண்டும்.

ஒன்று அல்லது இரண்டு உத்தேச பாதுகாவலர்கள் பாதுகாவலராக இருப்பதற்கு சம்மதம் தெரிவிக்கும் பட்சத்தில் அந்த இருவரில் ஒருவரை பாதுகாவலராக நியமித்து அந்த விபரத்தை பதிவுத் தபால் மூலம் பாதுகாவலராக நியமிக்கப்பட்ட நபருக்கு அனுப்பி வைக்க வேண்டும். அறிவிப்பு சார்வான நபர்களில் பாதுகாவராக நியமனம் செய்யப்படுவதற்கு சம்மதம் தெரிவிக்காத பட்சத்தில் விதி 4-ல் சொல்லப்பட்டுள்ள அட்டவணையில் உள்ள அடுத்த இரண்டு நபர்களுக்கு ஒரே சமயத்தில் அறிவிப்பு அனுப்ப வேண்டும். புதிதாக விண்ணப்பங்கள் எதுவும் விதி 4-ன்கீழ் தாக்கல் செய்யவேண்டியதில்லை. முதலில் சொல்லப்பட்டுள்ள உத்தேச எதிர்மனுதாரர்கள் தங்களுக்கு பாதுகாவலராக இருக்க விருப்பம் இல்லை என தெரிவித்த 3 நாட்களுக்குள்ளாக விண்ணப்பதாரர் நிர்ணயிக்கப்பட்ட தொகையுடன் தேவையான படிவங்களை பூர்த்தி செய்து தாக்கல் செய்ய வேண்டும்.

9) எந்தவொரு நபரையும் அவருடைய சம்மதம் இன்றி அவரை பாதுகாவலராக நியமிக்க முடியாது:- எந்தவொரு நபரையும் அவருடைய சம்மதம் இன்றி வழக்கில் பாதுகாவலராக நியமனம் செய்ய கூடாது. விண்ணப்பத்தை தாக்கல் செய்பவரே உத்தேச பாதுகாவலராகவோ அல்லது உத்தேச பாதுகாவலர்

சம்மதம் அளித்தாலோ தவிர உத்தேச பாதுகாவலருக்கு பாதுகாவலராக நியமனம் செய்யப்பட வேண்டிய விண்ணப்பத்தில் இணைப்பு H விண்ணப்பம் 11-ல் சொல்லப்பட்டுள்ள அறிவிப்பு அனுப்பப்பட வேண்டும்.

10) நீதிமன்ற பாதுகாவலர் - எப்பொழுது நியமனம் செய்யப்பட வேண்டும் - அவருக்கு தேவையான நிதிகளை எவ்வாறு வழங்க வேண்டும்: பாதுகாவலராக இருக்க தகுதியுள்ள மற்றும் விருப்பமுள்ள நபர்கள் யாரும் இல்லாத போது நீதிமன்றம் ஏதேனும் ஒரு அலுவலரை அல்லது வழக்கறிஞரை நீதிமன்ற காப்பாளாராக இருக்க வேண்டும் எனவும், மேலும் அவ்வாறு காப்பாளராக இருப்பவர்களுக்கு ஏற்படக்கூடிய செலவுத்தொகையினை எந்த தரப்பினர்கள் செலுத்த வேண்டும். ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தரப்பினர்களால் செலுத்த வேண்டும் எனவும் அல்லது மேற்படி வழக்கில் நீதிமன்றத்தில் உள்ள நிதியிலிருந்து வழங்கலாம். மேலும் வழக்கின் சூழ்நிலைகளுக்கு ஏற்ப செய்துள்ள செலவுத்தொகைகளை நீதியின்பொருட்டும், சந்தர்ப்பத்தின் பொருட்டும் செலுத்த வேண்டும் என உத்தரவு பிற்ப்பிக்கப்படும்.

11) நீதிமன்ற பாதுகாவலர் அல்லாத பாதுகாவலர் வழக்கை எதிர்த்து நடத்துவதற்கு தேவையான நிதிகள்:- ஒரு நீதிமன்றம் ஒரு வழக்கில் இளவர் பிரதிவாதியின் சார்பாக பாதுகாவலரை நியமனம் செய்திருக்கும் பட்சத்தில் அந்த பாதுகாவலர் பிரதிவாதியின் சார்பாக வழக்கை நடத்த போதுமான அல்லது தேவையான நிதி எதுவும் வைத்திருக்காத பட்சத்தில் மற்றும்

அதன்காரணமாக பிரதிவாதி எதிர்வாதம் செய்ய பாதிப்பிற்குள்ளாவார் என்ற நிலையில் நீதிமன்றம் அவ்வப்போது வாதியானவர் பாதுகாவலருக்கு வழக்கினை எதிர்வாதம் செய்ய தொகை வழங்க வேண்டும் எனவும் அவ்வாறு எதிர்வாதம் செய்ய வழங்கும் தொகை வாதியின் வழக்கு செலவுத்தொகையுடன் சேர்த்துக்கொள்ளப்படும். நீதிமன்றம் தேவைப்படும் பட்சத்தில் பாதுகாவலர் பெற்ற தொகைக்குரிய கணக்கு வழக்குகளை தாக்கல் செய்ய உத்தரவிடும்."

18. மத்திய சட்டத்தின் கீழ் உரிமையியல் நடைமுறைச் சட்டம் விதி 3-ல் சொல்லியுள்ள நடைமுறைகளும் கட்டளை 32 விதி 3-ன்படி மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் உரிமையியல் நீதிமன்றங்களை நிர்வகிக்கும் அதிகாரம், மிகுந்த சவால்களுடன் உள்ளது என்பதை அதன் அசல் வடிவத்தில் கீழ்க்கண்டவாறு கண்டறியலாம்.

"3. **இளவர் பிரதிவாதிக்கு காப்பாளர் நியமனம்**

1) பிரதிவாதி இளவராக இருக்கும் நிலையில் அவர் இளவர் என்ற விவரத்தை நீதிமன்றம் திருப்தியுற்று தகுதியான நபரை அந்த வழக்கில் இளவரின் காப்பாளராக நியமிக்க வேண்டும்.

2) இளவரின் பெயர் மற்றும் இளவருக்காக அசல் வாதியால் தாக்கல் செய்யப்படும் மனுவில் வழக்கிற்கான காப்பாளர் நியமன உத்தரவு பிறப்பிக்கப்படவேண்டும்.

3) அந்த மனு பிரமாண வாக்குமூலத்துடன் தாக்கல் செய்யப்பட்டு அதில் நியமிக்கப்பட வேண்டிய காப்பாளர் வழக்கின் இளவருக்கு எதிராக முன்னிருத்தப்பட்ட பிரச்சனைக்குரிய சங்கதிகளில் எவ்வித அக்கறையும் இல்லாதவர் என்றும், அவர் அவ்வாறு நியமிக்க தகுதியான நபர் என்றும், விபரங்கள் சரிபார்க்கப்பட்டு குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

4) எந்த மனுவிலும், எந்த உத்தரவும் பிறப்பிக்கக் கூடாது. அதற்கு விதிவிலக்கு எந்த ஒரு மனுவிலும் இளவருக்கு நியமிக்கப்பட்ட காப்பாளர் அல்லது தகுதியுடைய அதிகார அமைப்பு இதைப் பொறுத்து விளம்புகை செய்யப்படும் நபருக்கு அறிவிப்பு அனுப்பியும் அல்லது அவ்வாறு அம்மாதிரியான காப்பாளர் இல்லாத நிலையில் தகப்பனாருக்கு அறிவிப்பு அனுப்பியும் அல்லது தகப்பனார் இல்லாத நிலையில் தாயாருக்கு அல்லது தகப்பனாரோ அல்லது தாயாரோ இல்லாத நிலையில் இளவரின் வேறு இயற்கை காப்பாளருக்கு அல்லது தகப்பனாரோ அல்லது தாயாரோ அல்லது இயற்க்கை காப்பாளரோ இல்லாத நிலையில் இளவரை பராமரிக்கும் நபருக்கும் அறிவிப்பு அனுப்பி அறிவிப்பு சார்வு செய்யப்பட்ட நபர்களுக்கான ஆட்சேபனை கேட்க வேண்டும்.

4A) நீதிமன்றம் எந்த ஒரு வழக்கிலும் தகுதியானது என்று கருதும் பட்சத்தில் உள்விதி 4-ன்படி இளவருக்கு அறிவிப்பு அனுப்பலாம்.

5) உள்விதி 1-ன் படி வழக்கிற்காக நியமிக்கப்பட்ட இளவர் காப்பாளர் நியமனம் அவர் ஓய்வு பெறும் போதும் நீக்கம் செய்யும் போதும் அல்லது

இறப்பு ஆகியவை ஏற்படாத நிலையில் வழக்கில் ஏற்படும் அனைத்து நடவடிக்கைகளிலும் முழுமையாக தொடர்ந்து செயல்பட வேண்டும். இதனுடன் மேல்முறையீட்டு நடவடிக்கை அல்லது சீராய்வு நீதிமன்றம் மற்றும் தீர்ப்பாணை நிறைவேற்றும் இதர நடவடிக்கைகள் ஆகியவற்றிலும் தொடரும்."

(19) இரண்டு வகையான விதிகளை ஒப்பிட்டு பார்க்கும்போது மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தில் நீதிமன்றங்களை நிர்வகிப்பதற்கு உரிய விதிகள் விரிவாகவும், கடினமாகவும் உள்ளது. (i) மெட்ராஸ் உயர் நீதிமன்றம் நீதிமன்றங்களை நிர்வகிப்பதற்கு உரிய விதிகளான விதி 3 உள்விதிகள் 1 மற்றும் 2 ஆகியவை கூடுதல் தேவைகள் தொடர்புடையவை, வசதிக்காக இந்த விபரங்கள் இனிமேல் "பொருந்தக் கூடிய விதிகள்" என்று பரிசீலிக்கப்படுகிறது. (ii) விதி 3 துணை விதி 3 என்ற பொருந்தக்கூடிய விதிகள் அசல் சட்டத்தில் விதி 3 துணை விதி 1-ன் மீள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. (iii) விதி 3 துணை விதி 3 (A) என்ற பொருந்தக்கூடிய விதிகள் என்பது மத்திய சட்டம் துணை விதி 5-ன் மீள் உற்பத்தி ஆகும். (iv) விதி 3 துணை விதி 7 என்ற பொருந்தக்கூடிய விதிகள் மத்திய சட்டம் விதி 3 துணை விதி 4-ல் மேம்படுத்தப்பட்ட பதிவு.

(20) மிக முக்கியமான கட்டளை 32 விதி 3-ன் துணை விதிகள் (4), (5), (6) மற்றும் (7) ன் ஒரு பகுதி சில கூடுதல் கீழ்க்கண்ட தேவைகளை வரையறை செய்துள்ளது. (i) வாதியால் ஒரு இளவர் பிரதிவாதிக்கு காப்பாளர் நியமன மனு தாக்கல் செய்யப்படும் போது அந்த மனுவில் தகுதியுடையை நபர்களின் பட்டியல் அழைப்பாணை சார்வு செய்வதற்காக முழு முகவரியும் இணைப்பு H-ல் உள்ள படிவம் 11-ன் படி இணைக்கப்பட

வேண்டும்; (ii) காப்பாளர் நியமிக்ககோரும் விண்ணப்பமானது பிரமாண வாக்குமூலத்துடன் தாக்கல் செய்யப்பட வேண்டும். காப்பாளராக நியமனம் செய்யப்பட கோரும் நபர் அந்த வழக்கின் சங்கதிகளில் எந்த அக்கறையும் இல்லாதவராகவும் இளவரின் நலன்களுக்கு எதிராக அக்கறை எதையும் கொண்டிருக்கவில்லை (மத்திய சட்டத்தில் உள்ளவாறு) என்று உறுதி செய்யப்பட வேண்டும். மேலும் அந்த இளவரின் நிகழ்நிலை காப்பாளரின் பெயர் மற்றும் முகவரியுடன் சேர்த்து அவர் ஏன் காப்பாளராக செயல்பட அனுமதிக்கப்படவில்லை என்பதையும் குறிப்பிட வேண்டும். இயற்கை காப்பாளர் அல்லது நிகழ்நிலை காப்பாளர்கள் இல்லாதபட்சத்தில் தகுதியான நபர்களை நியமனம் செய்ய வேண்டுவதற்காக தக்க நபர்களின் பெயர் மற்றும் முகவரி உள்ளிட்ட கூடுதல் விவரங்களும் தெரிவித்து ஒரு பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்படவேண்டும்.

21) ஒப்புக்கொள்ளப்பட்டபடி, கற்றறிந்த நீதிபதி அவர்கள் விசாரணை நீதிமன்றத்தில் இந்த 3-ம் இளவர் பிரதிவாதிக்கு உரிய முறையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 32 விதி 3-ல் சொல்லியுள்ளவாறு உரிய முறையில் காப்பாளரை நியமனம் செய்ய விசாரணை நீதிமன்றம் தவறிவிட்டதை கருத்தில் கொண்டும் அந்த ஆவணங்களை வரவழைத்துள்ளார்கள். உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 115 (1)-ன் கீழ் சீராய்வு மனு விசாரணையில் கோப்புகளை வரவழைப்பதும் அதனை ஆராய்வதும் நீதிபதியின் அதிகாரத்தை மனுதாரர்கள் கேள்வி எழுப்பவோ, சந்தேகிக்கவோ முடியாது. உயர்நீதிமன்றமானது உண்மையில் காலவரையறைச் சட்டம் 1963 பிரிவு 5-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணை

நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்ட உத்தரவை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட சீராய்வு மனுவின் மீது தான் விசாரணை செய்தது என்பது உண்மைதான். ஆனால், ஒரு நடைமுறையின் முக்கியமான விதியைக் குறித்து காட்டுகின்ற, குறிப்பாக இயலாமையுடைய சில நபர்களின் தனிப்பட்ட குறிப்புகள் கொண்ட பதிவுறுகளை காணும், உயர் நீதிமன்றத்தின் அதிகார வரம்பை அது பறிக்கவோ அல்லது குறைக்கவோ செய்யாது. மெட்ராஸ் உயர் நீதி மன்றத்தின் கட்டளை 32 விதி 3 என்ற கடுமையான தன்மை என்பது பரந்த அதிகார வரம்புடன் தொடர்பு உள்ளது என்பதால் உரிமைபட்டயம் கூறு 17-ன் கீழ் உயர் நீதிமன்றம் அதன் அசல் அதிகார வரம்பை செயல்படுத்துகிறது மற்றும் அதிகாரம் என்பது ஒரு நீதிமன்றம் இளவருக்கான வழக்குளை நடத்தும்போது சதாரணமாக செயல்படுத்துவதுதான், ஆதனால், உயர்நீதி மன்றம் வழக்கில் அசல் ஆவணங்களை கேட்டும் இளவர் பிரதிவாதியின் காப்பாளர் கட்டளை 32 விதி 3-ன் கீழ் உரிய முறையில் நியமிக்கப்பட்டிருக்கிறதா இல்லையா என்று அறிவதற்கும் எடுத்துள்ள உயர் நீதிமன்றத்தின் நடவடிக்கை பொறுத்து மனுதாரர்கள் குறிப்பிட்டு விவரங்களை முன்னிருத்தி இருக்கிறார்கள் என்ற விவரங்கள் இல்லா நிலையில் உயர்நீதிமன்றத்தில் நடவடிக்கையில் சட்டத்திற்கு புறம்பான விஷயங்கள் எதையும் நாங்கள் கண்டறியவில்லை.

22) உயர்நீதிமன்றம் அரசியல் அமைப்புச் சட்டம் கூறு 227-ன்கீழ் காலவரையறை சட்டம் பிரிவு 5-ன்கீழ் செய்த மனுவை தள்ளுபடி செய்த உத்தரவின் மீது விசாரிக்கும்போது வழக்கில் ஏற்பட்ட எதிரவர் வாரா தீர்ப்பாணையையே நீக்க முடியாது என்ற வாதம் ஏற்புடையதல்ல – இந்திய அரசியலமைப்பு சட்டம் கூறு 227-ன்கீழ்

உயர்நீதிமன்றத்தின் அதிகாரமானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 115-ல் உள்ள அதிகாரத்திற்கும் கூடுதலாகவும் பரந்த அதிகாரம் ஆகும், என்பது சட்டத்தில் நன்கு முடிவான ஒரு நிலையாகும். சூர்யதேவ்ராய் /எதிர்/ ராம்சந்தர்ராய் மற்றும் பலர் [(2003) 6 எஸ்.சி.சி. 675] என்ற வழக்கில் இந்நீதிமன்றம் ஆவண கோப்புகளை அனுப்புக என்றும் நீதி பேராணையை கூறு 226-ன் கீழ் சார்பு நீதிமன்றங்களில் அதிகார வரம்பில் ஏற்படும் தவறுகளை சரிசெய்வதற்கு வழங்கமுடியும் என்று உறுதி செய்தது. ஆனால், மேற்படி கருத்தை கூறு 226-யை பொறுத்து சரியானதாக இருக்குமா என்ற ஐயப்பாடு மற்றொரு ஆயத்திற்கு ஏற்பட்டதால் மூன்று நீதிபதிகள் அடங்கிய ஆயத்திற்கு விசாரணைக்கு அனுப்பப்பட்டது. ராதே ஷியாம் மற்றும் ஒருவர் /எதிர்/ சாபிநாத் மற்றும் பலர்[(2015) 5 எஸ்.சி.சி. 423] வழக்கில் மூன்று நீதிபதிகள் அடங்கிய ஆயமானது சூர்யா தேவி ராய் வழக்கில் கூறு 226-ன்கீழ் அதிகார வரம்பு குறித்த தீர்ப்பாணையை மறுத்தளித்தும் கூறு 227-ன்கீழ் அதிகார வரம்பு தனித்துவமானது. எனவே, உயர்நீதிமன்றமானது 227-ன் கீழ் அதிகார வரம்பை பயன்படுத்தி ஒருதலைபட்ச தீர்ப்பாணையை நீக்கியது தவறு என்ற வாதத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. உயர்நீதிமன்றம் இந்திய அரசியலமைப்புச் சட்டம் கூறு 227-ஐ பயன்படுத்தி வழக்கில் ஏற்பட்ட எதிரவர் வாரா தீர்ப்பையே நீக்கியது அதிகார வரம்பை பயன்படுத்தியதில் எந்த தவறும் இல்லை.

23) உண்மையில் உயர்நீதிமன்றம் ஒரு இளவருக்கு முறையாக காப்பாளர் நியமிக்கப்படாமலே இளவருக்கு எதிராக ஏற்பட்ட எதிரவர் வாரா தீர்ப்பு வெறும் அந்த பொருண்மை அடிப்படையிலேயே இல்லா நிலையது ஆகுமா அல்லது அந்த இளவருக்கு ஏதும் பாதிப்பு ஏற்படுவதை பொறுத்து உள்ளதா என்ற கேள்விக்கு விசாரணை

செய்துள்ளது. மேலும் உயர்நீதிமன்ற நீதிபதி இந்த வழக்கின் இளவர் பாதிப்படைந்துள்ளர் என்ற பொருண்மையை கண்டறிந்தார்கள்.

24) குறிப்பிடதக்க பொருண்மை என்னவென்றால் உரிமையியல் நடைமுறை திருத்தச் சட்டம் 104 of 1976, கட்டடளை 32-ல் விதி 3 (A) திணித்தது இளவருக்கு ஏற்படும் பாதிப்பு குறித்து கேள்வியை முதன்முதலில் இந்த விதியின் மூலமாக உரிமையியல் நடைமுறை சட்டத்தில் எழுப்ப முடிந்தது. மேலும், விதி 3 (A) வானது வழக்கு துணை நண்பர் அல்லது காப்பாளர் இளவர் நலனுக்கு எதிராக இருக்கும் பட்சத்திலேயே பொருந்தும். ஒரு வழக்கில் இளவரின் நலனுக்கு எதிராக காப்பாளர் இருக்கும் பட்சத்தில் அவ்வழக்கின் தீர்ப்பாணை இல்லா நிலையதா இல்லையா என்ற எதிர்மறையான கேள்விகளுக்கு இந்த திருத்த சட்டம் ஒரு பதிலை தந்தது.

25) நாடாளுமன்றம் கட்டளை 32 விதி 3(A)-ன் கீழ் ஒருவகை வழக்குகள் மட்டுமே குறித்து இளவருக்கு ஏற்படும் பாதிப்பை சட்டத்தில் விவாதித்தது. ஆனால் இந்த வழக்கானது அந்த வகை வழக்கில் சோராதது எப்படியிருந்தாலும் நீதிபதி அவர்கள் இளவர் பாதிக்கப்பட்டுள்ளதாக கண்டறிந்துள்ளார். எனவே நாம் மேற்படி கேள்வி குறித்து விவாதத்திற்கு செல்ல தேவையில்லை.

26) மூன்றாவது பிரதிவாதி/எதிர்மனுதாரர்கள் ஒரு இளவரே அல்ல என்றுகூட ஒரு வாதம் செய்யப்பட்டது. நீண்ட வழக்கு தலைப்பின் அடிப்படையில் எழுப்ப முற்பட்ட மேற்படி வாதமானது, நிறைவேற்றுகை மனு எண் 65/2017ல் மூன்றாவது பிரதிவாதியின் வயது 2017 ஆம் வருடத்தில் 24 என்று குறிப்பிட்டுள்ளதை பொறுத்து செய்யப்பட்டது. எனவே, மேற்படி இளவர் எதிரவர் வாரா தீர்ப்பாணைக்கு வெகு முன்னரே உரிமை வயது

எய்தியவர் ஆகிவிட்டார் என்றும், எனவே காப்பாளர் நியமனம் குறித்த கேள்வி மற்றும் தீர்ப்பாணை இல்லா நிலையது என்ற கேள்வியும் எழாது.

27) மேற்படி வாதமானது நிராகரிக்க தகுதியுடையது. இந்த மனுதாரர்களே 2013-ல் வழக்கு தாக்கல் செய்த காலத்தில் 3-வது பிரதிவாதி இளவர் என்றும், அவருக்கு காப்பாளர் நியமிக்க கோரியும் விண்ணப்பம் செய்தனர். எனவே மேற்படி கற்பனையான புதுமையான வாதங்கள் அவர்களது வழக்கிற்கே எதிரானதாகும்.

28) மேலும் மேற்படி தீர்ப்பாணையானது 3-வது பிரதிவாதியை பொறுத்தது மட்டுமே ரத்து செய்யப்பட்டிருக்க வேண்டும், ஆனால் அனைத்து பிரதிவாதிகளுக்கும் எதிராக கூடாது என்ற வாதமும் வைக்கப்பட்டது. ஆனால் மேற்படி வாதத்திற்கு சட்டத்தில் இடம் இல்லை என்பது குறிப்பிடப்பட்டது.

29) மனுதாரர்களின் வழக்கறிஞர் லங்கா சன்னியாசி /எதிர்/ லங்கா எர்றன் நாயுடு [1929 லா வீக்லி 455] என்ற வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பை சுட்டி காண்பிப்பது தவறாகும். மேலும் ஒரு நபர் சமரச தீர்ப்பாணை ஏற்பட்ட தேதியில் வயது உரிமை பெற்றவராயிருப்பின் பின்னாளில் பின்னிட்டு ஏற்படும் வழக்கில் மேற்படி சமரச தீர்ப்பாணையை கேள்வி எழுப்ப முடியுமா என்ற கேள்வி குறித்தே விவாதிக்கப்பட்டுள்ளது. பின்னிட்டு வழக்கு முதல் மேல் முறையீட்டு நீதிமன்றத்தால் தீர்ப்பாணை செய்யப்பட்டது. இரண்டாவது மேல்முறையீட்டை விசாரிக்கும்போது உயர் நீதிமன்றமானது ஒரு இளவர் பிரதிவாதி வழக்கு நிலையில் இருக்கும் போது வயது உரிமையுடையவர் ஆகி தம் வழக்கை நடத்த விருப்பம் இல்லாமல் தனது காப்பாளரையும் உடனடியாக விடுவிப்பது என்ற பொருண்மை உரிமையியல் நடைமுறைச் சட்டம்

கட்டளை 32 விதி 3-ன் கீழ் தனக்கு எதிராக ஏற்பட்ட தீர்ப்பு தன்னை கட்டுப்படுத்தாது என்ற வாதத்திற்கு எடுத்துக்கொள்ள இயலாது என்று லங்கா சன்னியாசி வழக்கில் உறுதி செய்யப்பட்டது.

30) திருவாங்கூர் கொச்சின் உயர்நீதிமன்றம் இம்மனுதாரர்களால் சுட்டிக்காட்டப்படும் அவுசப் ஜோசப் /எதிர்/ தாமா எதம்மா [எ.ஐ.ஆர். 1956 டி.சி. 26] என்ற வழக்கில் குறையுற்ற தீர்ப்பே சரியானது என்று சுட்டிக்காட்டியுள்ளது.

31) ஒரு இயற்கை காப்பாளரின் உரிமைகள், கட்டளை 32 விதி 3(A)-ன் கீழ் ஒரு இளவருக்கு காப்பாளராக நியமிக்கப்படுவதால் பறிபோகிவிடுமா என்ற கேள்வி குறித்து திவ்யா தீப் சிங் மற்றும் பலர் /எதிர்/ ராம்பச்சன் மிஸ்ரா மற்றும் பலர் [(1997) 1 எஸ்.சி.சி. 504] என்ற வழக்கில் விவாதிக்கப்பட்டுள்ளது. மேற்படி கேள்விக்கு பதில் வெளிப்படையானதே. மேலும் ஒரு வழக்கிற்கு அது சம்மந்தமில்லை.

32) இளவருக்கு ஏற்படும் பாதிப்பு குறித்து குறிப்பாக ஒரு தந்தை இளவரின் சார்பாக எதிர்வழக்குரை தாக்கல் செய்து பகுதி பிரிதி பலன் அடைந்துள்ளதாக ஒத்துக்கொள்வது ராஜஸ்தான் உயர்நீதிமன்றத்தின் வழக்கு அந்தராம் மற்றும் ஒருவர் /எதிர்/ மதோலால் மற்றும் பலர் [எ.ஐ.ஆர். 1960 ராஜ். 189] என்ற வழக்கில் விவாதிக்கப்பட்டுள்ளது. மேலும் ரங்கம்மாள் எதிர் இளவர் அப்பாசாமி [85 லா வீக்லி 574] என்ற வழக்கில் ஒரு இளவரின் நலன் போதுமான வகையில் வழக்கில் பாதுகாக்கப்பட்டுள்ளதா என்ற பொருண்மையை உறுதி செய்கிறது. எனவே, மேற்படி வழக்குகள் இந்த வழக்கிற்கு எந்த வகையிலும் பொருந்தாது.

33) எனவே, உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பில் எந்வொரு சட்டபுறம்பும் இல்லாத காரணத்தால், நாங்கள் இந்திய அரசியலமைப்பு சட்டம் கூறு 136-இன் கீழ் குறுக்கீடு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை எனக் குறிப்பிட்டு, எனவே, இந்த சிறப்பு அனுமதி மனுவானது தள்ளுபடி செய்யப்படுகிறது.

சிறப்பு அனுமதி மனுவானது தள்ளுபடி செய்யப்படுகிறது.

<u>பொறுப்புத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."